தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

29.04.2013 A.M

## பெண் விவசாயிகள் பங்கேற்ற உழவர் பெருவிழா

மேல்மாம்பட்டு ஊராட்சியில் நடந்த உழவர் பெருவிழாவில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான பெண் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தமிழக முதல்வர் உழவர் திருவிழா நடத்த உத்தரவிட்டுள்ளார்.

சித்திரை மாதம் முழுவதும் நடக்கும் இவ்விழா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊராட்சியில் நடந்து வருகிறது.

விழாவில், வேளாண்மை, தோட்டக் கலை, வேளாண் பொறியியல், வணிகம் உள்ளிட்ட துறை அதிகாரிகள் கலந்து கொண்டு திட்டங்கள், மானியங்கள், செய்முறை மற்றும் கருத்துரைகளை வழங்கி வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை மேல்மாம்பட்டு ஊராட்சியில் நடந்த உழவர் பெருவிழாவில் ஏராளமான பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற பண்ருட்டி வட்டாரக் கல்விக் குழுத் தலைவர் கமலக்கண்ணன் விவசாயிகளுக்கு விதைகள், இடுபொருள்கள், மானியங்கள் மற்றும் திட்டப் பயன்களை வழங்கினார்.

மாவட்ட கவுன்சிலர் கே.தேவநாதன், ஊராட்சி மன்றத் தலைவர் குமாரசாமி, அக்ரோ தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொரப்பாடி பேரூராட்சியில்...

பண்ருட்டி, ஏப். 28: தொரப்பாடி பேரூராட்சியில் நடந்த உழவர் திருவிழாவில் அமைச்சர் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். பேரூராட்சி தலைவி வள்ளி இவ்விழாவை புறக்கணித்தார்.

அண்ணா கிராமம் ஒன்றியம் தொரப்பாடி பேரூராட்சியில் உழவர் திருவிழா சனிக்கிழமை நடந்தது.

அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடந்த விழாவில் வேளாண்மை, வேளாண்மை பொறியியல், தோட்டக்கலை, வேளாண் வணிகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் எம்.சி.சம்பத் சுழல் நிதி, விதை மற்றும் மானிய திட்டப் பயன்களை விவசாயிகளுக்கு வழங்கினார்.

அனைத்து துறை உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

துறை சார்ந்த அரங்குகளை அமைத்து, நவீன விவசாயக் கருவிகளை பார்வைக்கு வைத்திருந்தனர்.

மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், வட்டாட்சியர் பத்மாவதி, வேளாண் துறை அதிகாரிகள், மாவட்ட பொருளர் ஜானகிராமன், அண்ணாகிராமம் ஒன்றிய பெருந்தலைவர் சுந்தரிமுருகன், துணைத் தலைவர் எம்.சி.சம்பந்தம், பண்ருட்டி நகர செயலர் முருகன், அண்ணாகிராமம் ஒன்றிய துணை செயலர் செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொரப்பாடி பேரூராட்சி தலைவி வள்ளி விழாவில் பங்கேற்கவில்லை. உள்கட்சி பூசல் காரணமாக புறக்கணித்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கொளப்பாக்கம், நத்தம் ஊராட்சியில்...

பண்ருட்டி, ஏப். 28: பண்ருட்டி ஒன்றியம் கொளப்பாக்கம் மற்றும் நத்தம் ஊராட்சியில் உழவர் பெருவிழா புதன்கிழமை நடந்தது.

உதவி வேளாண்மை இயக்குநர் ஆர்.சங்கர் தலைமை வகித்தார். விழாவில், வேளாண்மை, தோட்டக்கலை, பொறியியல் துறைகளை சேர்ந்த வல்லுனர்கள் செயல் விளக்கம் மற்றும் கருத்துரைகளை வழங்கினர். மேலும், பயனாளிகளுக்குத் திட்ட உதவிகள் அளிக்கப்பட்டன.

வட்டார அட்மா குழு தலைவர் ராஜேந்திரன், கொளப்பாக்கம் ஊராட்சித் தலைவர் இளங்கோ, ஊராட்சி மன்றத் துணைத் தலைவர்கள் ரமேஷ், இளங்கோ, வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம், அக்ரோ தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### உழவர் பெருவிழாவில் கால்நடைகளுக்கு சிகிச்சை

ஆசாரங்குபத்தில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் செல்வசேகர் வரவேற்றார். ஆசாரங்குப்பம் ஊராட்சி தலைவர் இந்துமொழி முன்னிலை வகித்தார். மண்டல இணை இயக்குநர் அழகரசன் தலைமையில் கால்நடை சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் 50-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் பசு மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் ஆகியவை செய்யப்பட்டன.

இந் நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் சேகர், துணை இயக்குநர் ரத்தினசபாபதி, உதவி பொறியாளர் கலைவாணி, இளநிலை பொறியாளர் வேல்முருகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### உழவர் பெருவிழா

மரக்காணம் அருகே வடகோடிப்பாக்கத்தில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றியக் குழுத் தலைவர் விஜயா அர்ச்சுனன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் சிவக்குமார் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகம் சிறப்பு விருந்தினராக பேசினார்.

துணை வேளாண்மை அலுவலர் செப்ந்தரராஜன், வேளாண்மை பொறியியல் துறை ராமமூர்த்தி, தோட்டக்கலை அலுவலர் சுமதி, ஆத்மா திட்ட அலுவலர்கள் கோவிந்தசாமி, வீராசாமி, கிராம நிர்வாக அலுவலர் ரத்தினசபாபதி, உதவி வேளாண் அலுவலர் சுரேஷ் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். யமுனா நன்றி கூறினார்.

### எஸ்.எம்.எஸ். மூலம் சந்தை நிலவரம்: வேளாண் உதவி இயக்குநர் தகவல்

விளைபொருட்களின் சந்தை நிலவரங்கள் எஸ்.எம்.எஸ். மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என வேளாண் உதவி இயக்குநர் சண்முகையா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேட்டில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு ஊராட்சிமன்றத் தலைவர் நாகபூஷணம் முனுசாமி தலைமை வகித்தார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வேளாண் உதவி இயக்குநர் சண்முகையா பேசியதாவது: விவசாயத்தில் அதிக விளைச்சலை உண்டாக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. இதனால் விவசாயிகளின் வாழ்வில் பொருளாதார ரீதியாக வளர்ச்சி ஏற்படும்.

மேலும் விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்களும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு அதிக விளைச்சலைப் பெருக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு, தாங்கள் விளைவிக்கும் பொருள்களின் சந்தை விவரங்களைத் தெரிந்துக் கொள்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

அதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மைத் துறை சார்பாக விவசாயிகளின் செல்போன்களுக்கு அன்றன்றைய சந்தை நிலவரங்களை எஸ்.எம்.எஸ். மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்றார் அவர். உதவி வேளாண் அலுவலர் சிவசங்கரி வரவேற்றார். துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

விழாவில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள், கையேடு, மானிய விலையில் வழங்கப்படும் மினி டிராக்டர் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

நேமல்லூர் ஊராட்சியில்...

இதே போல், நேமல்லூர் ஊராட்சியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவுக்கு ஊராட்சிமன்றத் தலைவர் மாலா சேகர் தலைமை வகித்தார். சிறுவாடா ஊராட்சிமன்றத் தலைவர் ஸ்டீபன்ஹரி தலைமையில் அப்பகுதியில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

## உழவர் பெருவிழா பேரணி

பழனி அருகே உழவர் பெருவிழாவை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

பழனி அருகே சுக்கமநாயக்கன்பட்டியில் சனிக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். துணைத் தலைவர் மனோகரன் முன்னிலை வகித்தார். விழாவில் வேளாண் தொடர்பான அனைத்துத் துறையினரும் பங்கேற்று தொழில்நுட்பம் மற்றும் மானியம் பற்றி விளக்கினர்.

வேளாண். துறையின் கருத்துக் காட்சியும் நடைபெற்றது.

விழா முடிவில் பாரம்பரியமிக்க வேளாண் பொருள்களான இளநீர், பருத்தி, சீயக்காய் மற்றும் சிறுதானியங்கள் விழிப்புணர்வுப் பேரணியும் நடைபெற்றது.

மாவட்ட துணை வேளாண்மை இயக்குனர் தங்கச்சாமி பேரணியை துவக்கி வைத்தார்.

பேரணியில் சுப்ரமண்யா பொறியியல் கல்லூரி மாணவர்கள், துறை அலுவலர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

விழா ஏற்பாடுகளை பழனி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தாமணி தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் கணேசன், துரைச்சாமி, உதவி அலுவலர்கள் செந்தில், சின்னமாணிக்கம், அட்மா அலுவலர்கள் கோசல்நாத், மணிகண்டராஜா உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்.

## மன்னவனூரில் உழவர் பெருவிழா

கொடைக்கானல் மன்னவனூரில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

கொடைக்கானல் மேல்மலைக் கிராமமான மன்னவனூரில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மன்னவனூர் ஊராட்சிமன்றத் தலைவர் முனியம்மாள் திருவாசகம் தலைமை வகித்தார். கொடைக்கானல் தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் ராஜாமுகமது முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் சின்ராஜ் வரவேற்றார்.

திண்டுக்கல் மாவட்ட வேளாண்மைத் துறை (அட்மா திட்டம்) துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, 30 விவசாயிகளுக்கு இலவசமாக உயிரி உரங்களை வழங்கி வேளாண்மை குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனைத் துறை,

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மீன் வளத்துறை, விற்பனைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலிருந்து அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான

ஆலோசனைகளை வழங்கினர். இதில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அட்மா திட்ட மேலாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

## கூக்கால் ஏரியை தூர்வார விவசாயிகள் வலியுறுத்தல்

கொடைக்கானல் கூக்கால் ஏரியை தூர்வாரி பாசன வாய்க்கால் அமைத்து தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கொடைக்கானலில் இருந்து 45 கி.மீ தூரத்தில் உள்ளது மேல்மலை கிராமமான கூக்கால். இந்த ஊராட்சிக்குள்பட்ட பகுதியில் சுமார் 10 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். சத்தியக்கரை, பழம்புத்தூர், புதுப்புத்தூர், கோம்பை, விடுதலை நகர், குண்டுபட்டி, பள்ளங்கி, அடிசரை, எ.பி.காலனி உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட உட்கரை கிராமங்கள் உள்ளன.

இக் கிராமங்களில் பணப் பயிர்களான கேரட், உருளைக் கிழங்கு, பூண்டு, பீன்ஸ், முட்டைகோஸ் உள்ளிட்டவை சுமார் 1,500 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள கூக்கால் ஏரி விவசாயத்துக்கு பயன்பட்டு வருகிறது. கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக பருவமழை பொய்த்ததால் கூக்கால் ஏரியில் குறைந்த அளவே தண்ணீர் செல்கிறது. இதனால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, கூக்கால் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

3 கி.மீ சுற்றளவுள்ள இந்த ஏரியை நம்பித்தான், ஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறோம். ஆனால், சில ஆண்டுகளாக இந்த ஏரியில் தண்ணீர் இருப்பதில்லை.

கடந்த 15 ஆண்டுகளாக, இந்த ஏரியை தூர்வாரக் கோரியும், கூக்கால் முதல் பெரிய கண்மாய் வரை சிமெண்ட் வாய்க்கால் அமைத்துத் தரக் கோரியும் வலியுறுத்தி வருகிறோம். ஆனால் அரசு அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கூக்கால் ஊராட்சி சார்பில் ஏரியைச்சுற்றி மண் மூட்டை மற்றும் கற்களை வைத்து தண்ணீர் வெளியே செல்ல முடியாமல் அடைத்து விவசாயத்துக்கு பயன்படுத்தி வருகிறோம்.

இந்த ஏரியை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் தூர்வாரியும்,சிமெண்ட் வாய்க்கால் அமைத்தும் கொடுத்தால் விவசாயத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதே இப்பகுதி விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

இதுகுறித்து கூக்கால் ஊராட்சிமன்றத் தலைவர் ஆறுமுகம் கூறியது:

கூக்கால் ஏரியை தூர்வாரக் கோரியும், சிமெண்ட் வாய்க்கால் அமைக்கக் கோரியும் மாவட்ட நிர்வாகத்துக்கும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கும் மனு அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஏரியை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

## ஆண்டிபட்டி பகுதியில் இலவம் பஞ்சு விலை வீழ்ச்சி

ஆண்டிபட்டி தாலுகா பகுதியில், இலவம் பஞ்சு விலை விழ்ச்சியால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா மற்றும் போடி பகுதியில் இலவம் விவசாயம் அதிக அளவு நடைபெறுகிறது. ஆண்டிபட்டி பகுதியில் கடமலைக்குண்டு, வருசநாடு, தும்மகுண்டு, வாலிப்பாறை பகுதியில் பல நூறு ஏக்கர் பரப்பளவில் இலவம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

இம்மரங்கள் மார்கழி மாதத்தில் பூ விட்டு, வைகாசி மற்றும் சித்திரை மாதங்களில் காய்கள் முதிர்ச்சியடைந்து அறுவடைக்கு வருகின்றன. இக்காய்களை பறித்து பஞ்சு எடுத்து, போடி மற்றும் பெரியகுளம் பகுதி வியாபாரிகளிடம் விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு விளைச்சல் நன்றாக இருந்தது. தரம் பிரிக்கப்பட்ட பஞ்சு கிலோ ரூ. 65 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது, இந்த ஆண்டு மழை குறைவால் விளைச்சல் குறைந்துள்ளது. மேலும் காய்கள் முதிர்ச்சியடைந்த நேரத்தில் பெய்த மழையால், மரத்திலேயே இலவம் பஞ்சு வெடித்து பஞ்சுகள் சிதறி விடுகின்றன. இதனால் சேகரிக்கப்படுகின்ற பஞ்சு, தரமில்லாமல் இருப்பதாகக் கூறி குறைந்த விலைக்கு வாங்கப்படுகின்றன.

மேலும், மரத்திலிருந்து பறிக்கப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிற பஞ்சு கிலோ ரூ. 45-க்கு விற்கிறது. கடந்த ஆண்டை விட விளைச்சலும் குறைந்து, விலையும் குறைந்து விட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, விவசாயி முத்துப்பாண்டி கூறியது:

ஆண்டிபட்டி தாலுகா பகுதியில், பல நூறு ஏக்கர் அளவில் இலவம் விவசாயம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் விளைகிற இலவம் பஞ்சுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை. பறிக்கப்படுகின்ற கூலிக்குக் கூட கட்டுப்படியாவதில்லை.

இதனால், இப்பகுதியில் பஞ்சு கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பஞ்சு மெத்தைகள் மற்றும் தலையணை தொழிற்சாலைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## டெல்டா மாவட்டங்களைவிட கொங்கு மண்டலத்துக்கு கூடுதலாக வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

டெல்டா மாவட்டங்களைவிட, கொங்கு மண்டல விவசாயிகளுக்கு கூடுதலாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று, கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி பொதுச் செயலர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கூறினார்.

ஈரோடு அருகே சித்தோட்டில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகளுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: ஈமு கோழி நிறுவனங்களால் முதலீட்டாளர்களுக்கு அதிக வட்டியைத் தர இயலாது. இதுதொடர்பாக சில ஆண்டுகளுக்கு முன்பே தீவிர பிரசாரம் செய்தோம். ஆனால், மக்கள் எங்களை நம்பாமல் ஏமாந்துவிட்டனர். ஏழை விவசாயிகள், ஓய்வு பெற்றவர்கள் லட்சக் கணக்கில் முதலீடு செய்து தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

மேற்குவங்க மாநிலத்தில் ஏலச்சீட்டு மோசடியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை முன்னுதாரணமாக கொண்டு, ஈமு மோசடியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.500 கோடியை தமிழக அரசு ஒதுக்க வேண்டும்.

பிளஸ் 2 தேர்வுக்கு பின்னர் கொங்கு மண்டலத்தில் 1,200 மாணவிகளை காணவில்லை. சில அமைப்புகள் பள்ளிகளுக்கே சென்று காதலியுங்கள், கலப்புத் திருமணம் செய்யுங்கள் என துண்டுப் பிரசுரங்களை வழங்குகின்றனர். இதைப் பார்த்துதான் குழந்தைகள் தவறான பாதையை தேர்வு செய்கின்றனர். இதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

மது ஒழிப்பை வலியுறுத்தி, சிவன்மலையில் மே 19 ஆம் தேதி மகளிர் அணி சார்பில் சிறப்பு யாகம் நடத்தப்படும். மரக்காணம் கலவரம் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்கக்கூடாது. டெல்டா மாவட்டங்களைவிட கொங்கு மண்டலத்தில் வேளாண் உற்பத்தி அதிகம்; வறட்சி பாதிப்பும் அதிகம்.

எனவே, இங்கு அதிகமாக நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்றார்.

கட்சியின் அவைத் தலைவர் டி.ஆர்.டி.சென்னியப்பன் தலைமை வகித்தார். தலைமை நிலையச் செயலர் சூர்யமூர்த்தி, மாவட்டச் செயலர்கள் ஈஸ்வரமூர்த்தி, ராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

## உதகை, குன்னூரில் பலத்த மழை

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதல் இரவு வரை பலத்த மழை பெய்தது.

35 ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பாண்டில் கடும் வறட்சி நிலவுவதாகவும், வற்றாத நீரூற்றுக்கள் கூட நடப்பாண்டில் வறண்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் புகார் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. நீலகிரியில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதால், இந்த மழைக்கு அனைத்துத் தரப்பினரிடமும் வரவேற்பு உள்ளது.

குன்னூரில் சில இடங்களில் மழையுடன் ஐஸ் கட்டிகளும் கொட்டியுள்ளன. சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து, குன்னூரில் முகாமிட்டுள்ள முக்கிய பிரமுகர்கள் ஐஸ் கட்டி மழையை கண்டு ரசித்தனர். உதகையில் பெய்த மழையால் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற திமுக பொதுக்கூட்டத்திலும் இடையூறு ஏற்பட்டது.

பலத்த மழை, இடி, மின்னல் காரணமாக பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகமும், தொலைத் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

## உழவர் பெருவிழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

திருவண்ணாமலை வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெரு விழாக்களில், விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலையை அடுத்த கல்லொட்டு, வேளையாம்பாக்கம், நவம்பட்டு கிராமங்களில் அண்மையில் நடைபெற்ற விழாவுக்கு, ஊராட்சி துணைத் தலைவர் சுப்பிரமணி, நரியம்பட்டு, தலையாம்பள்ளம், சக்கரைதாமடை கிராமங்களில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் முத்துசாமி ஆகியோர் தலைமை வகித்தனர்.

சின்னகல்லப்பாடியில், ஊராட்சித் தலைவர் ல.காமராஜ், அல்லிகொண்டாப்பட்டில் ஊராட்சித் தலைவர் மதலைமுத்து, காட்டாம்பூண்டியில் ஊராட்சித் தலைவர் கனகராஜ், தச்சம்பட்டில் ஊராட்சித் தலைவர் அச்சுதன் ஆகியோர் தலைமையில் உழவர் பெருவிழாக்கள் நடைபெற்றன.

இவ் விழாக்களில் திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு மானிய விலையில் இடுபொருள்கள், வேளாண் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ் விழாக்களில் பல்வேறு துறைகளின் அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள்

செங்கத்தை அடுத்த புதுப்பாளையம் வேளாண்மைத் துறை சார்பில் கொரட்டாம்பட்டு, கொ.புதுப்பாட்டு ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் சாந்தி முனுசாமி தலைமை வகித்தார். கவுன்சிலர் ரகுபதி, துணை வேளாண்மை அலுவலர் சேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தார். உதவி விதை அலுவலர் சுப்பிரமணியன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி கலந்துகொண்டு, விவசாயிகளுக்கு இடுபொருள்கள், மானியத்தில் விதைகளை வழங்கினார் .

தொடர்ந்து, உதவி இயக்குநர் செல்லப்பாண்டியன் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்துப் பேசினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் சசிகுமார், தண்டபாணி ஆகியோர் சான்று விதைகள் பயன்படுத்துதல் குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

## சொட்டுநீர் பாசன முறையால் விவசாயிகள் அதிக மகசூல், லாபம் பெறலாம்

விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தினால் அதிக மகசூல் மற்றும் லாபம் பெறலாம் என தருமபுரி வேளாண்மை இணை இயக்குநர் பி.மனோகரன் தெரிவித்தார்.

அரூர் வட்டம், சந்திராபுரத்தில் உழவர் பெருவிழா சனிக்கிழமை நடைபெற்றது. இவ் விழாவில் பங்கேற்ற வேளாண்மை இணை இயக்குநர் பி.மனோகரன் பேசியது:

தமிழக அரசு வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. விவசாயிகள் தங்களது பொருளாதார வசதிகளை மேம்படுத்திக்கொள்ள விவசாயத்தில் சொட்டு நீர் பாசன முறையை கையாள வேண்டும்.

சொட்டு நீர் பாசனம் பயன்படுத்துவதால் வேளாண் விளை பொருள்களில் கூடுதல் மகசூல் கிடைக்கும். மகசூல் அதிகரிப்பதால் நல்ல லாபம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் வரையிலும் 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசன வசதி செய்து தரப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதிகள் செய்து தரப்படுகிறது.

சொட்டு நீர் பாசனம் மூலம் கரும்பு, துவரை, காய்கறிகள் உள்ளிட்ட பயிர்களை செய்யும் போது நல்ல லாபம் கிடைக்கிறது. வேளாண் துறை சார்பில் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான விதைகள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் கிடைக்கிறது. மானாவாரி பயிர் சாகுபடி, மாற்றுப் பயிர் சாகுபடி, துவரை நாற்று நடவு, நீடித்த நிலையான கரும்பு சாகுபடிகள் குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். முன்னதாக, மானிய விலையில் விவசாய இடுபொருள்கள், உழுந்து உற்பத்திக்கான மானியங்களை விவசாயிகளுக்கு அவர் வழங்கினார்.

உழவர் பெருவிழாவில், வேளாண்மை அலுவலர்கள் மோகன், எஸ்.அருணன், வேல்முருகன், விதை உதவி அலுவலர் பி.சக்திவேல், வேளாண்மை உதவி அலுவலர் (தோட்டக்கலை) முனியப்பன், உதவி பொறியாளர் சு.கனகராஜ் மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

## உழவர் திருவிழா: 16 விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

தூத்துக்குடி மாவட்டம், அத்திமரப்பட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் திருவிழாவில் 16 விவசாயிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. உழவர் திருவிழாவுக்கு, அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் தலைமை வகித்து, 16 விவசாயிகளுக்கு ரூ. 67 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசினார். நிகழ்ச்சியில், வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங்தனராஜ், வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி, ராஜகுமாரன் (தோட்டக்கலை), கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் பிண்டன் மிசியா, வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் மதியழகன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். வேளாண்மை துணை இயக்குநர் பொன்காத்தபெருமாள் வரவேற்றார். உதவி இயக்குநர் சிவகாமி நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

29.04.2013 A.M

---

## அதிக வரத்தால் மாதுளை விலை வீழ்ச்சி



சேலம்:மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு மாதுளை பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால், இதன் விலை சரிவடைந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான மாதுளை பழங்கள், மகாராஷ்டிர மாநிலம், சாங்கோலா, கர்நாடக மாநிலம், ஹீலியூர் ஆகிய இடங்களில் இருந்தே வரும். ஜூலை மாதத்தில் துவங்கி, அக்டோபர் வரை சீசன் இருக்கும். நடப்பாண்டில், இரண்டு மாதங்களுக்கு முன்னரே சீசன் துவங்கி விட்டது.

தற்போது, கர்நாடக மாநிலத்தில் இருந்து அதிக அளவில் மாதுளை பழங்கள், தமிழகத்துக்கு விற்பனைக்கு வருகின்றன.கடந்த வாரம் வரை, சென்னை, சேலம், மதுரை, கோவை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய இடங்களுக்கு தினந்தோறும், 50 டன் மாதுளை பழங்கள் மட்டுமே விற்பனைக்கு வந்தன.தற்போது தினந்தோறும், 150 டன் வரை மாதுளை பழங்கள் விற்பனைக்கு வருகின்றன. இதன் காரணமாக, தமிழகத்தில் மாதுளை பழங்களின் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம், 10 கிலோ எடை கொண்ட முதல் ரக மாதுளை பழ பெட்டி, 1,500 வரையிலும், இரண்டாம் ரகம், 1,200 முதல் 1,300 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டன. வரத்து

அதிகரித்துள்ளதால், தற்போது, முதல் ரக பெட்டி, 900 முதல், 1,000 ரூபாய் வரையிலும், இரண்டாம் ரக பெட்டி, 500 முதல், 600 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.மொத்த விலையில் சரிவு ஏற்பட்டதால், சில்லரை விலையில் முதல் ரகம் கிலோ, 100 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

சேலம் மாவட்ட மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் சங்கத்தின் துணை செயலர் சேஷா கூறியதாவது:முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, வியாபாரிகளே எதிர்பார்க்காத நிலையில், கர்நாடக மாநிலத்தில் இருந்து, தரமான மாதுளை பழங்கள் விற்பனைக்கு வந்து கொண்டுள்ளன. இதனால், மாதுளை பழங்களின் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.அதிக நீர்ச்சத்து, ஊட்டச்சத்து மிக்க பழங்கள் என்பதால், பழப்பிரியர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கை ரப்பர் விலை சரிவு



கொச்சி:சர்வதேச சந்தையில், இயற்கை ரப்பர் விலை குறைந்து வருகிறது. இதைஅடுத்து, உள்நாட்டிலும், இதன் விலை சரிவடையத் துவங்கியுள்ளது.உலகின் பல்வேறு நாடுகளில், மோட்டார் வாகனத் துறையில் கடும் மந்த நிலை நிலவுகிறது. இதனால், இயற்கை ரப்பருக்கான தேவையும் குறைந்துள்ளது.

இந்தியாவிலும், மோட்டார் வாகனங்கள் விற்பனை மிகவும் குறைந்துள்ளது. ரப்பர் பயன்பாட்டில், இத்துறை, 45 சதவீத பங்களிப்பை கொண்டு உள்ளது.தேவை குறைவால், உள்நாட்டில், "ஆர்.எஸ்.எஸ்-4' வகை இயற்கை ரப்பர் ஒரு கிலோ, 158-160 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இது, 140 ரூபாய் வரை சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த, 2011ம் ஆண்டு பிப்ரவரியில், ஒரு கிலோ ரப்பரின் விலை, 245 ரூபாய் வரை விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது.சர்வதேச சந்தையில், கடந்த வாரம், 148 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ இயற்கை ரப்பர், நடப்பு வார இறுதியில், 156 ரூபாயாக இருந்தது. இருப்பினும், பாங்காக் சந்தையில், ஒரு கிலோ ரப்பர், 130 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதை சாதகமாக பயன்படுத்தி, பல டயர் தயாரிப்பு நிறுவனங்கள் அதிகளவில் இறக்குமதி செய்யத் துவங்கியுள்ளன. இதனால், உள்நாட்டில், இதன் விலை மேலும் சரிவடையும் என, வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்திய தொழில் துறையினர், வரியில்லாமல், ஒரு லட்சம் டன்னுக்கும் அதிகமாக ரப்பரை இறக்குமதி செய்து கொள்ளமுடியும் என, ரப்பர் வாரியத்தின் தலைவர் ஷீலா தாமஸ் தெரிவித்தார். எனவே, இயற்கை ரப்பர் விலை மேலும் சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## "யூலிப்' திட்டங்களுக்கு வரவேற்பு குறைந்தது



புதுடில்லி:கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், காப்பீட்டு வசதியுடன், செய்யப்பட்ட முதலீட்டிற்கு அதிக ஆதாயம் கிடைத்ததால், "யூலிப்' எனப்படும், பங்கு சார்ந்த காப்பீட்டு திட்டங்கள், அதிகளவில் விற்பனையாகி வந்தன.கட்டுப்பாடு:இந்நிலையில், மத்திய அரசு, இது போன்ற திட்டங்களுக்கு, கடும் கட்டுப்பாடுகளை விதித்ததால், "யூலிப்' பாலிசி விற்பனை சரிவடையத் துவங்கியது. மேலும், பங்குச் சந்தை நிலவரம் சரியில்லாததும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, பங்கு சார்ந்த ஆயுள் காப்பீட்டு பாலிசி விற்பனை, கடந்த மூன்று ஆண்டுகளாக, சரிவடைந்து வருவதாக, மத்திய இணை அமைச்சர் (நிதி) நமோ நாராயண் மீனா ராஜ்ய சபாவில் தெரிவித்தார்.இதற்கு எடுத்துக்காட்டாக, சென்ற நிதியாண்டில், டிசம்பர் வரையிலான காலத்தில், பாலிசி விற்பனை, 0.1 சதவீதம் குறைந்து, 2.69 கோடியாக குறைந்துள்ளது. அதேசமயம், பிரிமியம் வருவாய், 3.96 சதவீதம் அதிகரித்து, 40,686 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.பிரிமியம்

வருவாய்:இதே போன்று, கடந்த 2010-11ம் நிதியாண்டில், பாலிசி விற்பனை, 9.6 சதவீதம் சரிவடைந்து, 4.81 கோடியாக குறைந்துள்ளது.

அதேசமயம், பிரிமியம் வருவாய், 83,174 கோடி ரூபாயாக உயர்ந்தது. இந்நிலையில், சென்ற 2011-12ம் நிதியாண்டில், பாலிசிகளின் விற்பனை, 8.2 சதவீதம் சரிவடைந்து, 4.41 கோடி ரூபாயாகவும், பிரிமிய வருவாய், 22.12 சதவீதம் குறைந்து, 64,772 கோடி ரூபாயாகவும் சரிவு அடைந்துள்ளது.ஆயுள் காப்பீடு :மத்திய அரசு, ஆயுள் காப்பீட்டு துறையில், முதலீட்டை மேம்படுத்தும் வகையில், இத்துறையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதையடுத்து, "இரிடா' அமைப்பும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.நாட்டின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது, ஆயுள் காப்பீடு பெற்றவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. எனவே, மக்களிடையே, காப்பீடு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் நிலையில், இத்துறை சிறப்பான அளவில் வளர்ச்சி காணும் என, ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

## சேனை கிழங்கு விலை தொடர் உயர்வு பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

கோபிசெட்டிபாளையம்: சேனை கிழங்கு விலை இரண்டு மடங்களாக உயர்ந்துள்ளதால், சேனை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., பாசன வசதி உள்ளன. கோபி, கள்ளிபட்டி, கணக்கம்பாளையம், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், சத்தி, அந்தியூர், அத்தாணி, ஆப்பக்கூடல், கொளப்பலூர், திங்களூர், சிறுவலூர், பெருந்துறை உள்ளிட்ட இடங்களில், 20 முதல், 25 ஆயிரம் ஏக்கரில் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி மற்றும் சேனை கிழங்கு பயிரிடப்பட்டன.சேனை கிழங்கு எட்டு மாத பயிராகும். மஞ்சளில் அதிகளவில் ஊடுபயிர் செய்யப்படுகிறது. களிமண் பகுதியில்சேனை கிழங்கு நன்கு வளரும் தன்மை கொண்டது. சேனை கிழங்கு பத்து மாத பயிராக இருந்தாலும், ஏழு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கரில், 15 முதல், 20 டன் கிழங்கும், வெள்ளை பூசணி மற்றும் சாம்பார் பூசணி ஏக்கருக்கு, 20 டன் வரையும் உற்பத்தியாகிறது.கோபி சுற்று வட்டாரத்தில் உற்பத்தியாகும் சேனை கிழங்குகள் மற்றும் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி ஆகியவை தமிழகத்தில் தஞ்சாவூர், சென்னை, திருச்சி,

கும்பகோணம் மற்றும் கேரளா, கர்நாடகா, துபாய் ஆகிய இடங்களுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. தவிர திருப்பதி தேவஸ்தானத்துக்கு, 15 நாளுக்கு ஒரு முறை அனுப்பப்படுகிறது.சென்ற இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள வறட்சியால், சேனை மற்றும் பூசணி உற்பத்தி, ஆயிரம் ஏக்கருக்கும் குறைவானது. சேனை கிழங்கு உற்பத்தி குறைவால் விலை இரண்டு மடங்களாக உயர்ந்துள்ளது. விலை உயர்வால், தற்போது எல்.பி.பி., பாசனத்தில் திறக்கப்பட்ட உயிர் நீரை பயன்படுத்தி, சேனை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர்.எல்.பி.பி., பாசன விவசாயி கூறியதாவது:கோபி சுற்று வட்டாரத்தில் மஞ்சளில் அதிகளவில் சேனை கிழங்கு ஊடுபயிராக உற்பத்தி செய்யப்பட்டன. வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி, சேனை கிழங்கு தனியாகவும் பயிரிடப்படும். சேனை கிழங்கு பயிரிட ஒரு ஏக்கருக்கு, நான்கு டன் விதை இருந்தால் போதும். மூன்று மாதத்துக்கு பிறகு களை எடுத்து, இரண்டு மூட்டை பொட்டாஷ், இரண்டு மூட்டை டி.ஏ.பி., வைத்தால் நன்கு வளரும்.முட்டுகூலி செலவு ஏக்கருக்கு, 50 முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை ஆகும். ஏக்கருக்கு, 15 முதல், 20 டன் கிடைக்கும். விதைக்கான சேனை கிழங்கு ஒரு டன், 4,000 ரூபாய் கொடுத்து வாங்கி வந்து பயிரிடுகிறோம். ஒரு டன் சேனை கிழங்கு, 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுவதால், லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.பூசணிக்கு களை எடுக்கும் பணி இல்லை. ஏக்கருக்கு, 30 முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். 15 முதல், 20 டன் கிடைக்கும். வெள்ளை பூசணி ஒரு டன், 10 ஆயிரம் முதல், 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.கோபியில் இருந்து தமிழகம் மற்றும் வடமாநிலங்களுக்கு அதிகம் செல்கிறது.திருப்பதி தேவஸ்தான திட்டத்துக்கு மாதம் இரு முறை சேனை கிழங்கு, சாம்பார் பூசணி அனுப்பி வைக்கப்படுகிறது, என்றார்.

## உழவர் பெருவிழா கோலாகலம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த மருதூர் வடக்கு கிராமத்தில் உழவர் பெருவிழா வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன் தலைமையில் நடந்தது.வேளாண் துணை அலுவலர் ராமதிலகம் வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் பாலசுப்ரமணியன், துணை தலைவர் குமரவேல், யூனியன் கவுன்சிலர் தனலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தோட்டக்கலை அலுவலர் சிவராமகிருஷ்ணன், நாகை மாவட்ட பொறியியல்துறை அலுவலர் பாண்டியன் ஆகியோர் விவசாயம் தொழில்நுட்பம் குறித்து விளக்கி பேசினர். விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுத்தல் விதை நேர்த்தி போன்ற பயிற்சிகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.வேளாண் உதவி இயக்குனர் சந்திகாசன் விவசாயிகளுக்கு விவசாய கருவிகள் மற்றும் இடுப்பொருட்களை வழங்கினார். ஆத்மாகுழு தலைவர் கலைச்செல்வன், ஒன்றிய ஜெ.,பேரவை தலைவர் அருண்,

விவசாயிகள், வேளாண் உதவி அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.உதவி வேளாண் அலுவலர் கந்தவேல் நன்றி கூறினார்.

### பழநியில் பலத்த காற்றுடன் மழை

பழநி:பழநியில் நேற்று இரவு பலத்த காற்றுடன் மழை பெய்ததால் ரோப்கார் நிறுத்தப்பட்டது. நேற்று இரவு 7.15 மணியளவில் பழநியில் பலத்த காற்றுடன் மழைபெய்தது. காற்று அதிகளவில் வீசியதால் ரோப்கார் உடனடியாக நிறுத்தப்பட்டது. மலைக்கோயிலின் மேல் பக்தர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த நிழற்கூரையின் தகரங்கள் பறந்தன. தங்கரதப்புறப்பாடு நடந்துகொண்டிருந்தபோது மழை பெய்ததால், முதல் 4 நிலைகளில் மட்டுமே தங்கரதம் நிறுத்தப்பட்டது. வேறு நிலைகளில் நிறுத்தாமல் கோயிலை ரதம் வலம் வந்தது.

### "" உழவர் பெருவிழாவின் நோக்கம் இரு மடங்கு விளைச்சல் '' விவசாயத்துறை இயக்குநர் தகவல்

கம்பம்:விளைச்சலை இரு மடங்காக்குவதே, உழவர் பெரு விழாக்களின் நோக்கமாகும் என்று க.புதுப்பட்டியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயத்துறை இயக்குநர் ராஜேந்திரன் பேசினார்.

கம்பம் புதுப்பட்டியில் விவசாயத்துறை சார்பில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது. விவசாயத்துறையின் மாநில இயக்குநர் ராஜேந்திரன் பேசியதாவது: மக்கள் தொகை பெருகி வருகிறது. அதற்கேற்ப உணவு தானியங்களின் சாகுபடியை அதிகரிக்க வேண்டும். அதற்காகவே நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. துவரை சாகுபடியில் குழித்தட்டு நடவு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர், இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு தயாராக கேட்டுக் கொண்டுள்ளார். விவசாயத்தில் நவீன சாகுபடி முறைகளை புகுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.சாகுபடியை இரண்டு மடங்காக அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு வருவாயை மூன்று மடங்காக அதிகரிக்கவும் செய்வதே இந்த உழவர் பெருவிழாக்களின் நோக்கமாகும். இந்த விழாக்களில், நவீன தொழில்நுட்பங்களை அதிகாரிகள், விவசாயிகளுககு விளக்கி கூற வேண்டும்,என்றார். விழாவில் தேனி இணை இயக்குநர் சுந்தரம், கம்பம் உதவி இயக்குநர் அசோகன், விவசாய சங்கத் தலைவர் சிவாஜிமோகன் உள்ளிட்ட துறை அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர்.

### ரூ.5.75 லட்சம் கோடி விவசாய கடன் நிதி அமைச்சர் சிதம்பரம் பேச்சு

சிவகங்கை:""நடப்பு ஆண்டில்,விவசாய கடனாக ரூ.5.75 லட்சம் கோடி வரை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம்," என, சிவகங்கையில், நிதி அமைச்சர் சிதம்பரம் பேசினார்.
சிவகங்கை, சிலுக்கப்பட்டியில் ஸ்டேட் பாங்க் கிளை திறப்பு விழா நடந்தது. வங்கி தலைவர் பிரதீப் சவுத்ரி வரவேற்றார். மேலாண்மை இயக்குனர் கிருஷ்ணகுமார் முன்னிலை வகித்தார். முதன்மை பொது மேலாளர் வர்ஷா புரந்தரே,பொது மேலாளர் கீர்த்திவாசன், துணை பொது மேலாளர் அருண் அகர்வால், முதன்மை மேலாளர் ரவிராம், கிளை மேலாளர்கள் அமுதன், சந்தீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அமைச்சர் சிதம்பரம் பேசுகையில், வீட்டு கடன் அதிகம் தரக்காரணம், கட்டுமான துறை நல்ல வளர்ச்சி கண்டு,வேலை வாய்ப்பும் அதிகரிக்கிறது. மத்திய அரசு, இத்துறையின் வளர்ச்சிக்கு பாடுபடுகிறது. கல்வி கடன் அதிகம் வழங்குவதின் நோக்கம், மாணவர்கள் நல்ல கல்வி பெறவேண்டும் என்பது தான். நாட்டில் சிறந்த கல்வி நிறுவனங்கள், நல்ல ஆசிரியர்கள் இருந்தால் மட்டுமே, கல்வி வளர்ச்சி பெறும். "உங்கள் பணம் உங்கள் கையில் திட்டம்' மூலம் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அதிக நிதியை வழங்குகிறது. ஆனால், மானியங்கள் மக்களுக்கு முழுமையாக சேருவதில்லை. மத்திய அரசின் மானியம் மக்களுக்கு நேரடியாக செல்லவே, இத்திட்டம் வந்தது.நடப்பு ஆண்டில்,ரூ.5.75 லட்சம் கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம், என்றார். விழாவில், 50 பயனாளிகளுக்கு, ரூ.1 கோடிக்கான கடன் திட்டங்களை வழங்கினார்.

## வறட்சி நிவாரணம் வழங்குவதில் குழப்பம்! விவசாயம் செய்தவர்கள் தவிப்பு

காரியாபட்டி:பட்டாதாரர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்பதால், உழவடை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு, நேரடியாக வறட்சி நிவாரணம் கிடைக்குமா என, குழப்பத்தில் அதிகாரிகளும், விவசாயிகளும் உள்ளனர்.
இந்தாண்டும் மழை பொய்த்ததால் தமிழகத்தில் பயிர் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டன. நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.
நெல் விவசாயத்திற்கு ஏக்கருக்கு 5 ஆயிரமும், பருத்தி, கம்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு 4 ஆயிரமும் வழங்க அரசு உத்தரவிட்டது. விவசாயிகளின் பட்டியலை வி.ஏ.ஓ.,க்கள் கணக்கெடுத்து அரசுக்கு அனுப்பி வைத்தனர். அதற்குரிய பணம் பட்டுவாடா செய்ய தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் பட்டாவில் இருக்கும் பெயர்களுக்குத்தான் பணம் பட்டுவாடா என, அறிவிக்கப்பட்டுள்ளது.
நிலத்தை கிரையம் பெற்றவர்கள், பட்டா மாறுதல் செய்யாமல் விவசாயம் செய்திருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு வறட்சி நிவாரணம் போய் சேருவதில் சிக்கல் உள்ளது. ஒரு குடும்பத்தில் தகப்பனார் பெயரில் பட்டா இருந்து, அவர் இல்லாதபட்சத்தில், மகன்கள் நான்குபேர் இருந்தால் யாருக்கு பணம் பட்டுவாடா செய்வது என்ற குழப்பம் நீடித்து வருகிறது. காரியாபட்டி பகுதிகளில் பெரும்பாலான விவசாய நிலங்கள் பட்டா மாறுதல் செய்யாமல் இருப்பதால், தற்போது உழவடை

செய்தவர்களுக்கு கிடைக்குமா என்பதில் சந்தேகமே.
இதில் பட்டாதாரர்களின் வங்கி கணக்கு எண்களை சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சில பகுதிகளில் விவசாயமே செய்யாதவர்கள் வறட்சி நிவாரணத்தில் சேர்க்கப்படுகின்றனர். உண்மையான பயனாளிகள் பாதிக்கப்படுகின்றனர். இது போன்ற நிலைமையை தவிர்க்க, ஏற்கனவே வழங்கப்பட்டதுபோல், தற்போது உழவடை செய்யும் விவசாயிகளுக்கு அந்தந்த வி.ஏ.ஓ.,மூலம் சான்றிதழ் வழங்கி, வங்கி மூலம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கலாம். உண்மையான பயனாளிகள் அனைவரும் பயன்பெற முடியும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டா மாறுதல் செய்யாததால், வறட்சி நிவாரணம் கிடைக்குமா என, விவசாயிகளும், பட்டாதாரர்களை தேடுவதில் அதிகாரிகளும் குழப்பத்தில் உள்ளனர்.

## வனங்களில் இனம் காணாத 62,345 தாவர வகைகள் தாவரவியல் ஆராய்ச்சியினர் தகவல்

ஈரோடு: இந்திய வனங்களில் மட்டும், 62,345 இனம் கண்டறியாத தாவர வகைகள் உள்ளதாக, தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.இந்தியா முழுவதும் வனங்களை பாதுகாக்க, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்திய வனங்களில் உள்ள மரம், செடி, கொடி, விலங்கினங்கள், பறவையினங்களை காக்க மத்திய அரசு பல சட்டங்கள், திட்டங்களை வகுக்கிறது. இந்தியாவில் வனத்துக்குள் நுழைந்து, வனச்சொத்துக்களை சேதப்படுத்துவோர் மீது, வனத்துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.அதிகமான விலங்கினங்கள், பறவைகள் வசிக்கும் காடுகள், உயர்ரக மரங்கள், மருந்து பொருட்கள் விளையும் அடர்ந்த காடுகளை, காப்புக்காடுகளாக அறிவித்து, பாதுகாக்கப்படுகிறது. இந்திய காடுகளில், மூன்று லட்சத்து 50 ஆயிரம் தாவர வகைகள் உள்ளதாக, தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில், 2.87 லட்சம் தாவர இனங்கள் குறித்து கண்டறியப்பட்டுள்ளது. மேலும், 62,345 தாவரங்களின் இனங்கள் குறித்து கண்டறியும் ஆய்வில், தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.இதுபற்றி தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது:உலகளவில் அதிக வனப்பகுதியை இந்தியா கொண்டுள்ளது. மரம், செடி, கொடி மட்டும் தாவர இனங்கள் என ஆகாது. பன்னங்களும், பாசிகளும் கூட தாவர இனங்களை சார்ந்தது தான். இந்திய வனங்களை, மரம், விலங்குகளை விட, செடி, கொடிகள், தாவர இனங்களும் தான் அழகு படுத்துகின்றன.இந்தியா வனங்களில் கண்டுபிடிக்கப்பட்ட, 3.50 லட்சம் தாவர இனத்தில், இதுவரை, 62,345 தாவரத்தின் இனங்கள் கண்டறியவில்லை. அடையாளம் காணப்பட்ட தாவரங்களில், 2.58 லட்சம் பூக்கும் தாவர இனங்களை சேர்ந்தது. இதில், 18,000 தாவரங்கள், பாசி இனத்தை சேர்ந்தது. இந்தியாவில், 17,672 வித்து மூடி தாவரங்களும், சிற்றின தாவரங்களில், 5,640 இனமும், தமிழகத்தில், நான்கு வித்து மூடி தாவர இனங்களும் உள்ளது. இந்திய வனங்களில் தாவரங்களின் எண்ணிக்கை, 32 சதவீதமாகும்.மேலும் பன்னதாவர

இனங்கள், இந்தியாவில், 1,022ம், தமிழகத்தில், 184ம் உள்ளது. தமிழகத்தில் அதிகப்படியாக, 533 அகனிய தாவர இனங்கள் உள்ளதாக ஆய்வு தெரிவிக்கிறது. அடையாளம் காணாத, 62,345 தாவர இனங்கள் குறித்து கண்டறிய ஆராய்ச்சி நடந்து வருகிறது.தமிழகம் வனப்பகுதியில், சில நாட்களுக்கு முன் பலத்த மழை பெய்துள்ளதால், செடி, கொடி அடர்ந்து வளர்ந்து, தாவரங்களின் எண்ணிக்கை பெருகி இருக்கும். வனங்களில் தாவர இனங்கள் பெருகுவதால், மான், முயல் உள்ளிட்ட தாவர உண்ணிகளின் எண்ணிக்கையும் பெருக வாய்ப்புள்ளது. தாவர இனங்களை காப்பாற்ற இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## வெயில் தாக்கத்தால் கொப்பரை உற்பத்தி பாதிப்பு தொடர்ந்து விலை குறைவால் விவசாயிகள் கவலை

கோபிசெட்டிபாளையம்: வெயில் தாக்கம் அதிகரிப்பால், கொப்பரை உற்பத்தி அதிகரித்துள்ளதால், கொப்பரை விலை கிலோ, 43 ரூபாய் குநீடிக்கிறது.ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, பெருந்துறை, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை உள்ளிட்ட பகுதிகளில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. கோபி சுற்று வட்டாரத்தில் சில இடங்களில் தென்னை மரங்களில் பதநீர் இறக்கி, கருப்பட்டி உற்பத்தி செய்யப்படுகிறது.மற்ற இடங்களில் கொப்பரை உற்பத்தி அதிகளவில் உள்ளது. உற்பத்தி செய்யப்படும் கொப்பரை கோபி, அவல்பூந்துறை உள்ளிட்ட இடங்களில் உள்ள கொப்பரை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.கோபி, பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் ஆகிய பகுதியில் எண்ணெய் உற்பத்தி ஆலைகள், கொப்பரைகளை கொள்முதல் செய்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சென்ற வாரம் ஒரு கிலோ, 44 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பு வாரம் கிலோவுக்கு, 50 காசு வரை வீழ்ச்சி அடைந்து, ஒரு கிலோ, 43.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெயில் தாக்கம் அதிகரிப்பால், கொப்பரை விலை தொடர்ந்து ஒரே விலை நீடிப்பது, விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:கோபி சுற்று வட்டாரத்தில், 1,000க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். தேங்காய் உடைத்து, 10 நாட்கள் வரை காய வைத்தால், கொப்பரையாக்க முடியும். உற்பத்தி செய்யப்படும் கொப்பரை தனியார் மற்றும் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. வெயில் தாக்கம் அதிகரிப்பால், கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கொப்பரை உற்பத்தி அதிகரித்துள்ளது.ஒழுங்கு முறை விபனை கூடத்துக்கு சராசரியாக, 450 மூட்டைகள் வரை வரத்தாகிறது. கொப்பரை உற்பத்தி அதிகரிப்பால் விலை, 42 ரூபாயில் இருந்து, 44 ரூபாய் வரை நீடிக்கிறது. சென்ற ஆண்டில் ஒரு கிலோ, 72 ரூபாய் வரை விற்பனையானது. சென்ற ஆண்டை விட நடப்பாண்டு விலை குறைவாக இருப்பது, விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

### மண்புழு உரம் தயாரிக்க விழிப்புணர்வு

கோத்தகிரி : கோத்தகிரி உபகோட்டம் கடினமாலா ஊராட்சிக்கு உட்பட்ட கோத்திமுக்கு ஆதிவாசி கிராமத்தில், உழவர் பெருவிழா நடந்தது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். இதில், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் டாக்டர் ராஜா, மண்புழு உரம் தயாரிப்பு குறித்தும், உபாசி (கே.வி.கே) தேயிலை தர மேம்பாடு அலுவலர் ராஜ்குமார், தேயிலை பறித்தல், சிவப்பு சிலந்தி நோயை கட்டுப்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தனர்.

இதில், கோத்திமுக்கு சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். ஊர் தலைவர் நடராஜ் தலைமை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் (பொறுப்பு) ரமேஷ் நன்றி கூறினார்.

### உழவர் சந்தையில் இஞ்சி ரூ.100 வெளிமார்க்கெட்டில் அதிகபட்சம் ரூ.140

ஊட்டி : நீலகிரியில் இஞ்சி விளைச்சல் குறைந்துள்ளதால், ஊட்டி உழவர் சந்தையில், ஒரு கிலோ இஞ்சி 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், கூடலூரில், அதிகளவு இஞ்சி விளைவிக்கப்படுகிறது.

உள்ளூர் தவிர, மேட்டுப்பாளையம், கோவை உட்பட வெளியூர்களுக்கும், நீலகிரியில் விளையும் இஞ்சி விற்கப்படுகிறது. தற்போது, கூடலூரில் இஞ்சி விளைச்சல் குறைந்துள்ளது; உழவர் சந்தை, வெளி மார்க்கெட்டில் இஞ்சி வரத்து குறைந்துள்ளது.

ஊட்டி உழவர் சந்தையில், நேற்று ஒரு கிலோ இஞ்சி 100 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

உழவர் சந்தை நிர்வாக அலுவலர் சந்திரன் கூறுகையில்,""கூடலூரில் கடந்தாண்டு போதிய மழையில்லாததால் தான், இஞ்சி விளைச்சல் குறைந்துள்ளது. ஊட்டி உழவர் சந்தையை பொருத்தவரை, இது, வரலாறு காணாத விலையேற்றமாகும். இஞ்சியை பொறுத்தவரை, அதிகபட்சம் ஒரு கிலோ 40 -50 ரூபாய் வரையே விற்கப்பட்டுள்ளது," என்றார்.

ஊட்டி உட்பட வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ இஞ்சி 120 -140 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

### உழவர் பெருவிழா நலஉதவி வழங்கல்

துறையூர்: உழவர் பெருவிழாவில், விவசாயிகளுக்கு நலஉதவிகள் வழங்கப்பட்டது.திருச்சி மாவட்டம் நடுவலூரில், துறையூர் வட்டார வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவுக்கு பஞ்சாயத்து தலைவர் மோகன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் சரவணன், உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.உழவர் பெருவிழாவை துறையூர் வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி துவக்கி வைத்து பேசினார். தோட்டக்கலை, வேளாண் அலுவலர்கள் முருகன், பிரகாஷ், கால்நடை மருத்துவர் மணிவேல், உதவி பொறியாளர் செந்தில், பட்டு வளர்ச்சி

ஆய்வாளர் மாரியப்பன், வேளாண் விற்பனை அலுவலர் சிவபெருமாள் ஆகியோர், தாங்கள் சார்ந்த துறையில் உள்ள திட்டங்கள், மானியங்கள் குறித்து விரிவாக பேசினர்.விழாவில் இடுபொருள்கள், உழவர் பெருவிழா நல உதவிகளை, பஞ்சாயத்து தலைவர் மோகன் விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் அட்மா அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள், விவசாயிகள், விவசாயக்கூலி தொழிலாளிகள் பங்கேற்றனர். பஞ்சாயத்து செயலாளர் தனக்கோடி நன்றி கூறினார்.

### மரவள்ளி கிழங்கு வரத்து குறைவு சத்தமின்றி உயர்ந்தது விலை

வேலாயுதம்பாளையம்: வறண்ட காவிரியால் மரவள்ளி கிழங்கு உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டு, இதன் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகின்றது.கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், புகளூர், நொய்யல், சேமங்கி, மரவாப்பாளையம், புங்கோடை, குளத்து பாளையம், நடையனூர், தோட்டக்குறிச்சி, குந்தானிபாளையம், ஓலப்பாளையம், ஒரம்புபாளையம், கவுண்டன்புதூர், நல்லிகோவில், சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்குமேல் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது.இந்த பகுதிகளில் விளையும் மரவள்ளி கிழங்கு நாமகிரிபேட்டை, ராசிபுரம், மலவேப்பங்கொட்டை, சேலம், ஆத்தூர், மல்லூர், நாமக்கல் புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, கீரனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் கிழங்கு மில்களுக்கு ஜவ்வரிசி தயாரிக்க இடைத்தரகர்கள் மூலம் வாங்கிச் செல்கின்றனர். மேலும் சிப்ஸ் தயார் செய்பவர்களும் விற்பனையாகிறது.ஜவ்வரிசியின் விலை நிலவரத்தை வைத்து மரவள்ளிக் கிழங்கிற்கு, விலை நிர்ணயம் செய்கின்றனர். ஜவ்வரிசி விலை சேகோ சர்வ் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி கடந்த சில வாரங்களுக்கு முன் ஒரு டன் மரவள்ளி கிழங்கு 9 ஆயிரம் ரூபாய் விற்பனையானது. இந்த வாரம் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.இதுகுறித்து மரவள்ளி கிழங்கு விவசாயிகள் கூறியதாவது:வேலாயுதம்பாளையம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் மரவள்ளி கிழங்குகள், பெரும்பாலும் இடைத்தரகர் மூலம் ஆலைகளுக்கு விற்பனை செய்யபடுகிறது. தற்போது கடுமையான வெயில், மழை பொய்த்ததால், காவிரி மற்றும் வாய்க்கால்களில் தண்ணீர் இல்லாததாலும் மரவள்ளி கிழங்கு உற்பத்தி பாதித்துள்ளது. இதனால் பல்வேறு இடங்களிளும் ஜவ்வரிசி மில்கள் இயங்கவில்லை. இதன் எதிரொலியாக தற்போது மரவள்ளி கிழங்கு விலை உயர்வு ஏற்பட்டு வருகின்றது.இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

### எகிறிய வாழை விலை: விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: திருமண சீசன், கோவில் திருவிழா உள்ளிட்ட சுப விஷேசங்கள் தொடங்கியுள்ள நிலையில் வாழைத்தாருக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் "செம' குஷியில் உள்ளனர்.கரூர்

மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், லாலாப்பேட்டை மற்றும் குளித்தலை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக காவிரியாற்று பகுதிகளான திருக்காடுதுறை, நடையனூர், சேமங்கி, நொய்யல், மறவா பாளையம், தளவாபாளையம், ஆவராங்காட்டூர், தவுட்டுபாளையம், கட்டிபாளையம் மற்றும் பாலத்துரை பகுதிகளில் அதிகளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.காவிரியாற்று பகுதிகளில் விளையும் வாழை ருசியாக உள்ளதால் ஈரோடு, திண்டுக்கல், மதுரை, திருச்சி, சேலம், நாமக்கல் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பபடுகிறது.சித்திரை மாதம் தொடங்கி ஆனி மாதம் வரை மூன்று மாதங்களுக்கு திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் களை கட்டும். மேலும், கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கோவில் திருவிழாக்கள் சிறப்பாக நடந்து வருகிறது. இதனால், கடந்த மாதத்தை விட வாழைத்தாருக்கு கூடுதல் விலை கிடைக்கிறது.கரூரில் கடந்த மாதம் 300 ரூபாய்க்கு விற்ற பூவன் தார், தற்போது 400 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 200 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், ரஸ்தாளி 250 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், பச்சை நாடான் 150 ரூபாயில் இருந்து 200 ரூபாய்க்கும், மொந்தன் வாழை ஒரு காய் இரண்டு ரூபாயில் இருந்து ஐந்து ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.குறிப்பாக, கோடை வெயிலில் உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும் மொந்தன் வாழைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. "வரும் வைகாசி மாதம் முதல் ஆனி மாதம் வரை வாழைத்தார் விலை மேலும் உயரும்" என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

### கரூரில் பூக்கள் விலை கடும் உயர்வு

கரூர்: திருமணம், கோவில் திருவிழா மற்றும் வரத்து குறைவு காரணமாக, கரூரில் பூக்களின் விலை ஜெட் வேகத்தில் உயர்ந் துள்ளது.கரூர் பூ மார்கெட்டுக்கு, வேலாயும்பாளையம், நொய் யல், நாமக்கல், பரமத்தி, வேலூர், திண்டுக்கல், குஜிலியம்பாறை, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் பகுதியில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. பருவமழை தவறியது காரணமாக, மார்க்கெட்டு வரும் பூக்களின் வரத்து குறைந்துள்ளது. மேலும், திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் மற்று கோவில் திருவிழா காரணமாக அனைத்து பகுதிகளுக்கும், பூக்கள் அதிக ளவில் தேவையாக உள்ளது. இந்நிலையில், கரூரில் பூக்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.கரூர் பூ மார்கெட்டில், மல்லிகை 200 ரூபாயில் இருந்து 300 ரூபாய்க்கும், முல்லை 150 ரூபாயில் இருந்து 250 ரூபாய்க்கும், செவ்வந்தி பூ 100 ரூபாயில் இருந்து 150 ரூபாய்க்கும், சம்பங்கி 200 ரூபாயில் இருந்து 250 ரூபாய்க்கும், கோழிக்கொண்டை 50 ரூபாயில் இருந்து 80 ரூபாய்க்கும் விலை போனது.""வரும் வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் திருமணங் கள் அதிகளவில் நடக்கும். அப்போது பூக்களின் விலை மேலும், அதிகரிக்கும் என" பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பராமரிப்பு இல்லை மாநில எண்ணெய் வித்துக்கள் பண்ணையில் மக்கும் கருவிகள்

காஞ்சிபுரம்:முசரவாக்கம் மாநில எண்ணை வித்துக்கள் பண்ணை, போதிய பராமரிப்பு இல்லாததால், இங்குள்ள விவசாய உபகரணங்கள் வீணாகி வருகின்றன.

காஞ்சிபுரம் - பெரும்பாக்கம் சாலையில், 12வது கி.மீ., தொலைவில் உள்ளது, முசரவாக்கம் மாநில எண்ணெய் வித்துக்கள் பண்ணை. இங்கு ஒரே எல்லையில், 160 ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன. 1979ம் ஆண்டு துவங்கப்பட்ட, இந்த பண்ணையில் மானாவரி மற்றும் இறவை சாகுபடி மூலம் வேர் கடலை, உளுந்து, பச்சைப்பயறு, காராமணி, எள், சணப்பு, கேழ்வரகு உள்ளிட்ட, பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தண்ணீர் பற்றாக்குறை சென்னையில் உள்ள வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து உத்திரவிடப்படும் புதிய ரக பயறு வகைகள், இந்த பண்ணையில் சாகுபடி செய்யப்பட்டு, குறிப்பிட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தன. இந்த பயறு செடிகளின் பாசனத்திற்காக, மூன்று நீர் இறைக்கும் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இதில், ஒன்று பழுதடைந்து போனது. தற்போது, இரண்டு மோட்டார்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இங்கு, இரண்டு வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர், காவலர் ஒருவர் என, மொத்தம் நான்கு பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த பகுதியில் நிலத்தடிநீர், 900 அடி ஆழத்திற்கு சென்றுவிட்டதால், சாகுபடியின் பரப்பளவும், 20 ஏக்கராக சுருங்கிவிட்டது.

கருகும் மரங்கள்தண்ணீர் இல்லாததால், இங்குள்ள, 365 தென்னை மரங்கள், 320 பருத்தி மரங்கள் காய்ந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளன.

இதுதவிர, வேளாண்மை தொழிலுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த டிராக்டர்கள், ஏர் உழும் பவர்டில்லர், தானியங்களை பிரித்தெடுத்து - பதப்படுத்தும் இயந்திரங்கள் ஆகியவை, மண்ணோடு மண்ணாக மக்கி வருகின்றன.

இதுகுறித்து, வேளாண்மை அலுவலர் ஜெயராமன் கூறுகையில், ""இங்குள்ள நிலத்தின் வளம் குறைந்து விட்டதால், பயிர்கள் வீரியமாக வளர்வது இல்லை. தற்போது தெளிப்பு நீர் பாசனத்தில், 10 ஏக்கரில் வேர்கடலை சாகுபடி செய்வதற்கான பணி நடந்து வருகிறது. பண்ணையில் கூடுதல் பயிர்களை சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,'' என்றார்.

## "வறட்சியால் பாதிப்பு இல்லையா?' விவசாயிகள் சங்கம் கண்டனம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், வறட்சியால் பாதிப்பு இல்லை என, தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பிய, மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மைத் துறைக்கு, தமிழ்நாடு

விவசாயிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து, விவசாயிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை: தமிழக அரசு, சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து, தமிழகம் முழுவதும் நில வரியை ரத்து செய்துள்ளது. மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரணம் வழங்கப்படும் என்றும், அறிவித்து உள்ளது. இது தொடர்பாக, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய், பயிர் செய்யாத நிலத்திற்கு, 15 ஆயிரம் ரூபாய், விவசாயத் தொழிலாளர் குடும்பத்திற்கு, 10 ஆயிரம் ரூபாய், பயிர் கடன் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, கடந்த மாதம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மழை குறைவு காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1,914 ஏரிகள் மற்றும் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பம்பு செட் மூலம், தற்போது, 1.90 லட்சம் ஹெக்டேர் நிலம், விவசாயம் செய்ய தகுதி உடைய நிலமாக உள்ளது. இவ்வாண்டு, போதிய மழை இல்லாததால், ஏரி, குளம், கிணறு, ஆறு போன்ற நீர்த்தேக்கங்களில், தண்ணீர் குறைவாக நிரம்பியது. இதனால், நடப்பாண்டு நவரை பட்டத்தில், மாவட்டம் முழுவதும், 14 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் மட்டும், நெல் சாகுபடி செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை, மின்தடை போன்றவற்றால், முழுமையாக சாகுபடி செய்ய முடியவில்லை.

உற்பத்தி பாதிப்பு

இதனால், நெல் உற்பத்தி குறைந்து, ஒரு ஏக்கருக்கு, 30 மூட்டை அறுவடை செய்ய வேண்டிய நிலத்தில், 15 மூட்டை முதல், 20 மூட்டை

நெல் வரை மட்டும் உற்பத்தி கிடைத்தது.

கரும்பு, நிலக்கடலை, நெல், பயறு வகைகள் ஆகியவை, பல கிராமங்களில் காய்ந்து போனது.

கடந்த ஆண்டு நவரை பட்டத்தில், 35 ஆயிரத்து 49 ஹெக்டேர் நிலத்தில், நெல் சாகுபடி செய்யப்பட்டு, 1.50 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

இவ்வாண்டு மழை இல்லாததால், 14 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில்,

56 ஆயிரம் மெட்ரிக் டன்

நெல் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.

அதிகாரிகள் மெத்தனம்இச்சூழலில், காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் உள்ள கிராமங்களில், பயிர் செய்த நிலம், ஏரி, குளம், கிணறு ஆகியவற்றை, நேரடியாக சென்று ஆய்வு செய்யாத வேளாண்மைத் துறை, வருவாய் துறை ஊழியர்கள்,

அலுவலகத்தில் இருந்தபடி, மாவட்டத்தில் வறட்சி பாதிப்பு இல்லை என, பொய்யான அறிக்கையை, மாவட்ட நிர்வாகம் மூலம், தமிழக அரசுக்கு அனுப்பிஉள்ளனர். இது, வன்மையாக

கண்டிக்கத்தக்கது.எனவே, கிராமங்களில் நேரடியாக ஆய்வு செய்யாமல், அறிக்கை அனுப்பிய அரசு அலுவலர்கள் மீது, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் ஆய்வு செய்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு, நிவாரணம் கிடைக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## பசுந்தீவன வளர்ப்பில் அதிக லாபம்

சுங்குவார்சத்திரம்:பட்டுமுடையார்குப்பம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர், குறைந்த செலவு மற்றும் குறைவான பராமரிப்பில், கால்நடைகளுக்கான பசுந்தீவனப் புல் வளர்த்து வருகிறார். ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திற்கு உட்பட்டுள்ளது பட்டுமுடையார்குப்பம். இங்கு, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதியை சேர்ந்த விவசாயி மனோகரன், தனக்கு சொந்தமான நிலத்தில், குறைந்த பராமரிப்பு மற்றும் குறைவான ஆட்கள் மூலம், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீனப் புல் வளர்த்து வருகிறார்.
இதுகுறித்து, அவர் கூறியதாவது: கடந்த 20 ஆண்டுகளாக, எனக்கு சொந்தமான 4.5 ஏக்கர் நிலத்தில், விவசாயம் செய்து வருகிறேன். தண்ணீர் தட்டுப்பாடு, வேலையாட்கள் பற்றாக்குறை மற்றும் மின் தடை போன்ற பிரச்னைகளால், தற்போது, குறைவான அளவு விவசாயம் செய்து வருகிறேன். இந்நிலையில், குறைந்த பராமரிப்பு மற்றும் குறைவான செலவில், லாபம் தரும் பசுந்தீவன வளர்ப்பு குறித்து, காட்டுப்பாக்கத்தில் உள்ள, கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தில், பயிற்சி பெற்றேன். அங்கு, என்.ஏ.டி.பி., வகை தீவனப்புல் கரணை வழங்கினர். மேலும், பராமரிப்பு செலவாக, 10 ஆயிரம் ரூபாய் அரசு மானியமும் வழங்கப்பட்டது.தற்போது, உலர் தீவனங்கள் விலை உயர்ந்துள்ளதாலும், பற்றாக்குறை இருப்பதாலும், கால்நடை வளர்ப்பாளர்கள், அதிகளவில், பசுந்தீவனத்தை வாங்கிச் செல்வதில் ஆர்வமாக உள்ளனர். இதனை, கால்நடைகளுக்கு வழங்குவதால், அவைகளுக்கு உஷ்ணம் குறைவதுடன், பால் உற்பத்தி அதிகரிக்க முடியும். இவ்வாறு, மனோகரன் தெரிவித்தார்.

## இயற்கை உரமாக தக்கை பூண்டு வளர்ப்பு மண் வளத்தை பாதுகாக்கும் விவசாயிகள்

பொன்னேரி:விளை நிலங்களில் ரசாயன உரங்களை குறைத்து, இயற்கை உரத்தை அதிகரிக்க தக்கை பூண்டு செடிகளை வளர்த்து, தழை சத்தாக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.
மீஞ்சூர் ஒன்றியம், தடப்பெரும்பாக்கம், சேகண்யம் உள்ளிட்ட 200 கிராமங்களில், விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. ஆண்டிற்கு சம்பா, குறுவை என, இரு முறை நெல் பயிரிடப்படுகிறது. சம்பா பருவத்திற்கு பின்னர், விவசாயிகள் தங்களது விளை நிலங்களை,

மூன்று மாதங்களுக்கு தரிசாக போடுகின்றனர். நீர் வளம் உள்ள பகுதிகளில் மட்டும், பின்சம்பா விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர். தக்கை பூண்டு வளர்ப்பு விவசாயிகள், நெல் பயிரிடுவதற்கு முன்னர், நிலத்திற்கு அடியுரமாக ஆடு, மாடுகளின் சாணத்தை அடியுரமாக பயன்படுத்தி வந்தனர். மேலும், வேம்பு, மா, பூவரசம் உள்ளிட்ட மரங்களின் கருகும் இலைகளையும் மக்கவைத்து, விளை நிலங்களுக்கு தழைச் சத்தாக பயன்படுத்தினர். இவை மிக சிறந்த இயற்கை உரங்களாக விவசாயிகளுக்கு பயன்பட்டு, அதிக மகசூலை கொடுத்தது. காலப்போக்கில், விளை நிலங்கள் வீட்டு மனைகளாகவும், தொழிற்கூடங்களாகவும், மாறிய சூழ்நிலையில், கால் நடைகளுக்கான மேய்ச்சல் குறைந்தது. விவசாயிகளும், கால்நடை வளர்ப்பில் ஈடுபாட்டை குறைத்துக் கொண்டனர். வேறு வழியின்றி விளை நிலங்களுக்கு ரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையும் உருவானது. இதனால், விளை நிலங்களுக்கு கிடைக்க வேண்டிய இயற்கை சத்துக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை நிவர்த்தி செய்ய விவசாயிகள் சம்பா பருவம் முடிந்ததும், விளைநிலங்களில் தக்கை பூண்டை பயிரிடுகின்றனர்.

தண்ணீர் தேக்கத்ததையும், வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது. உவர் நிலங்களுக்கு ஏற்ற ஒரு முக்கிய பசுந்தாள் உரமாக இது பயன்படுகிறது. இது நல்ல தழைச்சத்தாக மாறி மண் வளம் பெருகுவதுடன், கூடுதல் மகசூல் பெறுவதற்கான வாய்ப்பு களையும் உருவாக்குகிறது. இதனால் ரசாயன உரச் செலவினங்களும் குறைகிறது. தட்டுப்பாடு இது குறித்து, சேகண்யம் கிராமத்தை சேர்ந்த விவசாயி பாலு கூறியதாவது:தக்கை பூண்டு நல்ல தழைச் சத்தாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு, 10 கிலோ, தக்கை பூண்டு விதையை விதைத்து, 50 முதல், 60 நாட்களுக்கு பின்னர், வளரும் தக்கை பூண்டு செடிகளை டிராக்டர் மூலம் உழுது விடுவோம். அது மண்ணோடு மக்கி பசுந்தாள் உரமாக மாறிவிடும்.

ஜூன் மாதம், குறுவை பருவம் பயிரிடும் போது மிகவும் பயனுள்ளதாக அமைந்து விடும். ஆண்டிற்கு ஒருமுறை இதுபோல் செய்வதால், மண்ணின் வளம் காக்கப்படுகிறது. வேளாண்மை துறையினர் மானிய விலையில் (ஒரு கிலோ, 21 ரூபாய்) வழங்கும் தக்கை பூண்டு விதை, விவசாயிகள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஆந்திர மாநிலம் சூளூர்பேட்டையில் ஒரு கிலோ, 50 ரூபாய் கொடுத்து வாங்கி வந்து விதைக்கிறோம்.இவ்வாறு பாலு கூறினார்.

தக்கைப் பூண்டு விதை தட்டுப் பாடு குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

எங்களுக்கு வரும் விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து விடுகிறோம். இனி வரும்

காலங்களில் தட்டுப்பாடின்றி தக்கைப்பூண்டு விதை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## பூண்டி நீர்தேக்கத்தில் மீன் வளர்ப்பு 4.15 லட்சம் குஞ்சுகள் விடப்பட்டன

திருவள்ளூர்: பூண்டி நீர்தேக்கத்தில், மீன்கள் வளர்ப்பதற்காக, 4.15 லட்சம் மீன் குஞ்சுகள் மீன்துறை மூலம் விடப்பட்டுள்ளன. திருவள்ளூரை அடுத்த பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில், மீன்துறையின் மூலம், 4.15 லட்சம் வளர்ந்த கொண்டை மீன் குஞ்சுகள் விடப்பட்டன. இந்நிகழ்ச்சியில், மீன்துறை உதவி இயக்குனர் பத்மாவதி கலந்து கொண்டு பேசும் போது கூறியதாவது: ஐதராபாத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மீன்வள அபிவிருத்தி வாரிய நிதியுதவியுடன், மீன்துறை வாயிலாக மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில், மீன்குஞ்சுகள் இந்த நீர்த்தேக்கத்தில் வளர்க்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில், 48.05 லட்சம் மீன் குஞ்சுகள் இந்த நீர்த்தேக்கத்தில் வளர்ப்பதற்காக விடப்பட்டன. இந்த ஆண்டு இதுவரை, 1.45 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. தற்போது, மேலும், 4.15 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு அதிகளவு மீன்கள் பிடிக்கப்பட்டதைப் போன்று, இந்த ஆண்டும் அதிகளவு மீன்கள் பிடித்து மீனவர்கள் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள முடியும். இவ்வாறு, பத்மாவதி கூறினார். நிகழ்ச்சியில், மீன் துறை ஆராய்ச்சி உதவியாளர் ரகமத்துல்லாகான், மீன்துறை ஆய்வாளர், பூண்டி (பொறுப்பு) கங்காதரன், பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் அம்புரோஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஊத்துக்கோட்டை சந்தைக்கு மாம்பழ வரத்து அதிகரிப்பு

ஊத்துக்கோட்டை;மாம்பழம் சீசன் துவங்கியுள்ளதால், ஊத்துக்கோட்டை சந்தைக்கு மாம்பழ வரத்து துவங்கி உள்ளது. கோடை காலம் துவங்கியவுடன் வெப்பத்தின் தாக்கம் எவ்வளவு அதிகரிக்குமோ, அந்த அளவிற்கு பொதுமக்கள் மனதில் மாம்பழத்தின் நினைப்பும் அதிகளவில் இருக்கும். முக்கனிகளில் ஒன்றான, மாம்பழ சீசன் துவங்கியது. மாந்தோப்புகள் அதிகம் முதலில் செந்துாரா, ஈதர், ஜவாரி, ருமானி, மல்கோவா, காலாபாடி, நீலம், பெங்களூரா உள்ளிட்ட வகைகளில் மாம்பழங்கள் வரத்து துவங்கும். ஊத்துக்கோட்டை அடுத்த வெங்கடாபுரம், அல்லிக்குழு, பிளேஸ்பாளையம், ஆந்திர மாநிலம், புதுக்குப்பம், பேரடம், சத்தியவேடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் பெருமளவு மாந்தோப்புகள் உள்ளன. ஏப்ரல் மாத துவக்கத்தில், மரங்களில் காய்கள் பெருமளவு தென்பட்டன. ஆனால், காய்கள் காய்க்கத் துவங்கியவுடன் திடீரென சூறாவளி காற்று வீசியதில், பெருமளவு மாங்காய்கள் உதிர்ந்தன. இதனால், விவசாயிகள் கடும்

வேதனையுடன் நஷ்டம் அடைந்தனர். எனினும், கடந்த இரு தினங்களாக ஊத்துக்கோட்டைக்கு மாம்பழ வரத்து துவங்கி உள்ளது. இங்கு செந்தூரா, ஜவாரி போன்ற மாம்பழம் வகைகள் வந்துள்ளன. இவை ஒரு கிலோ, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

எதிர்பார்ப்பு இதுகுறித்து, ஊத்துக்கோட்டையைச் சேர்ந்த மாம்பழம் வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது: ஏப்ரல் மாதம் துவங்கி, ஜூலை மாதம் வரை மாம்பழம் சீசன் உள்ளது. தற்போது காய்கள் வளர்ந்துள்ள நிலையில் காற்று வீசியதில் பெருமளவு உதிர்ந்து விட்டன. தற்போது மாம்பழ வரத்து துவங்கி உள்ளது. செந்தூரா, ஜவாரி போன்ற வகைகள் வந்து உள்ளன. அடுத்த சில தினங்களில் மீதியுள்ள மாம்பழ வகைகள் வந்து விடும். மழை பெய்யாமல் இருந்தால் மாம்பழ வரத்து அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏரி மதகுகளை சீரமைக்க வேண்டும் விவசாயிகள் தரப்பில் கோரிக்கை

உளுந்தூர்பேட்டை:ZXஏரி மதகுகளை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

உளுந்தூர்பேட்டை தாலுகா அலுவலகத்தில் விவசாயிகளுக்கான குறைகேட்பு கூட்டம் நடந் தது. சப்-கலெக்டர் சுபோத் குமார் தலைமை தாங்கினார். தாசில்தார் லலிதா, மண்டல துணை தால்தார் உமாமகேஸ்வரன் முன்னிலை வகித்தனர். விவசாய சங்க பிரதிநிதிகள் ஒரத்தூர் ஜோதிராமன், கணையார் ஜெயராமன், திருவெண்ணைநல்லூர் ஜெயராமன், பாதூர் அய்யங்கார் என 6 விவசாயிகள் மட்டுமே பங்கேற்றனர்.

மழை பொய்த்தல், மின் தட்டுப்பாடு என பல்வேறு காரணங்களால் விவசாயம் பெரிதும் பாதித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். களவனூர், பாதூர் ஏரி மதகு சீரமைக்கவேண்டும். கிராமங்களில் விவசாய பொருட்களை ஏற்றி செல்ல சாலை வசதிகளை ஏற்படுத்தி தரவேண்டும்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏரியிலுள்ள நீர் கொள்ளளவு மேலதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தி பாசன வசதியை ஏற்படுத்த வேண்டும் உட்பட கோரிக் கைகள் குறித்து விவசாய சங்க பிரதிநிதிகள் பேசினர்.

## சங்கராபுரம் பகுதியில் காய்கறி விலை உயர்வு

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் காய்கறி விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. இதனால் பொது மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

சங்கராபுரம் பகுதியில் கடந்த 10 நாட்களாக காய்கறிகள் விலை விர்ரென உயர்ந்துள்ளது. கிலோ

40க்கு விற்ற பீட்ருட் 60 ரூபாயும், 40 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ் 70 ரூபாய்க்கும், 28 ரூபாய்க்கு விற்ற கத்தரி 40 ரூபாய்க்கும், 40 ரூபாய்க்கு விற்ற கேரட் 60 ரூபாய்க்கும், 15 ரூபாய்க்கு விற்ற தக்காளி 25 ரூபாய்க்கும், 28 ரூபாய்க்கு விற்ற முள்ளங்கி 40 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கு விற்ற சாம்பார் வெங்காயம் 50 ரூபாய்க்கும், 24 ரூபாய்க்கு விற்ற முருங்கைக்காய் 40 ரூபாய்க்கும், 15 ரூபாய்க்கு விற்ற பெரிய வெங்காயம்(பெல்லாரி) 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.
சங்கராபுரம் பகுதிக்கு பெங்களூரிலிருந்து அனைத்து காய்கறிகளும் விற்பனைக்கு வருகிறது. பெங்களூரு மார்கட்டிலிருந்து காய்கறி வரத்து தற்போது குறைந்துள்ளது. இதனால் காற்கறிகள் விலை ஏற்றம் கண்டுள்ளது என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

## மீன் வளர்க்க விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பம் வரவேற்பு

*சேலம்: தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில், மீன் வளர்க்க விருப்பமுள்ள விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.கலெக்டர் மகரபூஷணம் விடுத்துள்ள அறிக்கை:மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலைவாய்ப்புத் திட்டத்தில், சேலம் மாவட்டத்தில், 2,500 சதுர மீட்டர் பரப்பளவு பட்டா நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு மீன்குஞ்சு / மீன் வளக்க பல்நோக்கு பண்ணை அமைத்து தரப்படும். இந்த திட்டத்தில், 2013-14ம் ஆண்டுக்கான தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்படி மீன்குஞ்சு/ மீன் வளர்ப்புக்கென மீன்குஞ்சுகள் மற்றும் மீன் தீவனம் கொள்முதல் செய்ய, 46 ஆயிரம் ரூபாயில், 50 சதவீத மானியமாக, 23 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.இந்த பல்நோக்கு பண்ணை குட்டை அமைக்க உள்ள இடம், அதற்கு தகுதியானதாகவும், நீர்வளம் மற்றும் களிமண் நிறைந்த நிலமாகவும் இருக்க வேண்டும். அதிக விவசாயிகள் விண்ணப்பித்தால், தேவைக்கும், தகுதிக்கும் ஏற்ப பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.இந்த திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள் மீன்வள உதவி இயக்குனர் (உள்நாட்டு மீன்வளம்) மேட்டூர் அணை - 1 என்ற அலுவலகத்தில் தொடர்பு கொண்டு, பட்டா நகல் இணைத்து விண்ணப்பிக்கலாம்*

## விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க பரிசோதனை

*சேலம்: சேலம் மாவட்டத்தில், அரசு சார்பில் வழங்கப்பட்ட, 49 ஆயிரத்து, 328 விலையில்லா செம்மறி, வெள்ளாடுகளுக்கு, குடற்புழு நீக்க மருத்துவ பரிசோதனை மற்றும் தடுப்பூசி போடப்படுகிறது.கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் (பொறுப்பு) ஜெயராமன் அறிக்கையில் கூறியிருப்பதாவது:தமிழக முதல்வர் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள பெண்கள் வாழ்வாதாரம் மேம்பட விலையில்லா செம்மறி, வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தை துவக்கி*

*வைத்துள்ளார். சென்னை தவிர, மாநிலம் முழுவதும், ஒரு லட்சம் பயனாளிக்கு, நான்கு லட்சம் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. 21 மாவட்டங்களில், 24 ஆயிரம் பயனாளிகளுக்கு கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது.சேலம் மாவட்டத்தில், 49 ஆயிரத்து, 328 வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மருத்துவு பரிசோதனை மற்றும் தடுப்பூசி பணிகள் கால்நடை துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயனாளிகளை ஊக்கவிக்கும் விதமாக, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிக்கு பரிசு வழங்கப்பட்டுள்ளது.விலையில்லா செம்மறி, வெள்ளாடுகள் எடையை அதிகரிக்கும் விதமாகவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் கால்நடை பராமரிப்பு துறை மருத்துவ குழுவினர், பயனாளிகளின் இருப்பிடத்துக்கு சென்று, கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்து வருகின்றனர்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.04.2013 A.M

## தேயிலைத்தூள் விலை கிலோ ரூ.2 குறைந்தது



குனனூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 17வது ஏலம், கடந்த வியாழன், வெள்ளியில் நடந்தது. மொத்தம் 13.44 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9.74 லட்சம் கிலோ. டஸ்ட் ரகம் 3.70 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் அதிகளவு வர்த்தகர்கள் பங்கேற்றாலும் குறைந்த அளவிலான(69சதவீதம்) தேயிலைத்தூளே விற்பனையானது, அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூ.2 வரை சரிவு ஏற்பட்டது.

இலை ரகம் சாதா கிலோ ரூ.80 முதல் ரூ.85 வரையும், உயர் வகை ரூ.115 முதல் ரூ.150 வரையும் விற்றது. டஸ்ட் ரகம் சாதா ரூ.85 முதல் ரூ.88வரையும், உயர்வகை ரூ.130 முதல் ரூ.160 வரையும் விற்றது. சிடிசி டஸ்ட் ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.176ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.250ம் கிடைத்தது. அடுத்த ஏலத்துக்கு, 13.70 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## வரத்து அதிகரித்ததால் வத்தல் விலை ரூ.1000 சரிவு



விருதுநகர்: வத்தல் வரத்து அதிகரித்துள்ளதால், குவின்டாலுக்கு ரூ.1000 வரை விலை குறைந்துள்ளது. நிலக்கடலை பருப்பு மூட்டைக்கு ரூ.100 குறைந்ததால் கடலைப்புண்ணாக்கு மூட்டைக்கு ரூ.50 குறைந்துள்ளது.ஆந்திராவில் வத்தல் விளைச்சல் அதிகமானதால், குண்டூர் மார்க்கெட்டிற்கு தினசரி வத்தல் வரத்து 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மூட்டைகளாக தொடர்கிறது. இவற்றில் தரமற்ற வத்தல் வரத்து அதிகமாக உள்ளது. இந்நிலையில், வத்தல் தேவை குறைந்துள்ளதால் குண்டூர் மார்க்கெட்டில் ரூ.5,500 முதல் ரூ.7 ஆயிரம் வரை விற்ற சம்பா வத்தல், தற்போது ரூ.4,500 முதல் ரூ.6 ஆயிரம் என விலை குறைந்துள்ளது.

விருதுநகர் மார்க்கெட்டிற்கு தினசரி 400 மூட்டை வத்தல் வரத்து உள்ளது. விருதுநகரில் சம்பா வத்தல் குவின்டால் ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7,200 வரை விற்பனையானது. தற்போது ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6,200 என விலை குறைந்துள்ளது. நிலக்கடலை பருப்பு ஏற்றுமதி செய்வதில் உள்ள விதிகள் மாற்றத்தால்(80 கிலோ) மூட்டை ரூ.4,900ல் இருந்து ரூ.4,800 ஆக குறைந்ததால், கடலைபுண்ணாக்கு(100 கிலோ) மூட்டை ரூ.3,750ல் இருந்து ரூ.3,700 என குறைந்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

29.04.2013 A.M

---

## வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை உரங்களை உற்பத்தி செய்வது பற்றிய பயிற்சி நாளை நடக்கிறது

புதுக்கோட்டை

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை உரங்களை உற்பத்தி செய்வது பற்றிய இலவச பயிற்சி நாளை நடக்கிறது என்று கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் மனோ கரன் வெளியிட்டுள்ள செய் திக்குறிப்பில் தெரிவித்துள்ள தாவது;

**ஊட்டச்சத்து குறைபாடு**

இன்றைய வேளாண்மையில் புதிய உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வருகின்றனர். ஆண்டுக்கு சாகுபடி செய்யும் எண்ணிக்கையும் அதிகரித்து, அதிக மகசூல் கிடைக்கப் பெற்ற வருகின்றனர். அதே சமயம் பயிர்கள் மண்ணில் உள்ள சத்துக்களை தொடர்ந்து எடுத்து வளர்கின்றன.

ஆனால் தேவையான அளவு 13 ஊட்டசத்துக்களை அளிப்பதில்லை. இதில் தழை, மணி, சாம்பல் சத்து மட்டுமே சாகுபடியாளர்கள் அளித்து வருகின்றனர். தொழுவுரம் இடுதல் மிகவும் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் மண்ணில் கிடைக்கக்கூடிய சத்துகளின் விகிதாசாரம் பயிர் களுக்கு தேவையான அளவில் கிடைக்காமல் ஊட்டச்சத்து குறைபாடுகள் ஏற்படுகிறது.

**உரங்கள் உற்பத்தி பயிற்சி**

எனவே வேளாண்மை யில் இயற்கை உரங்களின் முக்கியத்துவம், மேலும் அதனை பண்ணையிலேயே உற்பத்தி செய்வது குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி, நாளை (செவ்வாய்க்கிழமை) அன்று வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது. இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் கல ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களை தெரிந்து கொள்ள வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியரும், தலைவருமான வைரவனை டெலிபோன் எண் 04322 290321, செல்போன் 99940 84375 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## பரமத்திவேலூரில் வெற்றிலை விலை உயர்வு உற்பத்தி குறைவு எதிரொலி

பரமத்திவேலூர்

பரமத்திவேலூரில் மழை பொய்த்து போனதால், வெற்றிலை உற்பத்தி குறைந்து உள்ளது. இதன் காரணமாக விலை சற்று அதிகரித்து உள்ளது.

**வெற்றிலை பயிர்**

நாமக்கல் மாவட்டம் பர மத்திவேலூர் தாலுகா காவிரி கரையோர பகுதிகளில் உள்ள பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அணிச் சம்பாளையம், பொய்யேரி, நன்செய் இடை யாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வெற் றிலைகள் சேலம், ஊட்டி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மகாராஷ் டிரா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மற்றும் ரெயில்கள் மூலமாக அனுப் பப்பட்டு வருகிறது.

**விலை உயர்வு**

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற ஏலத்தில் இளம்பயிர் கற்பூரி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.2 ஆயிரத் துக்கும், இளம்பயிர் வெள் ளைக்கொடி வெற்றிலை மார் சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்துக் கும் ஏலம்போனது.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் இளம்பயிர் கற்பூரி வெற்றிலை மார் 104 கவளிகள் கொண்ட சுமை ஒன்று ரூ.2,500க்கும், இளம்பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை மார் சுமை ஒன்று ரூ.5,500க்கும் ஏலம் போனது. மழை பொய்த்து போனதால், வெற்றிலை உற்பத்தி வெகுவாக குறைந்து உள்ளது. அதேசமயம் தண்ணீர் இல்லாத காரணத் தினால் முதியம் பயிர் வெற் றிலை முற்றிலுமாக காய்ந்து விட்டது. இதுவே விலை உயர்வுக்கு காரணம் என விவ சாயிகள் தெரிவித்தனர்.

## ரப்பர் இறக்குமதி மீதான வரி விரைவில் உயரும் ஆனந்த் சர்மா தகவல்

திருவனந்தபுரம்

இயற்கை ரப்பர் இறக்குமதி மீதான வரி விரைவில் உயர்த்தப்படும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

வாகன டயர் தயாரிக்கும் நிறுவனங்கள் இயற்கை ரப்பரை அதிக அளவில் பயன்படுத்துகின்றன. எனவே இத்துறை நிறுவனங்கள்தான் ரப்பர் இறக்குமதியில் முன்னிலையில் உள்ளன. உள்நாட்டில் ரப்பர் விலை குறைந்து வருகிறது. இந்நிலையில் இறக்குமதி அதிகரித்தால் ரப்பர் விலை மேலும் சரிவடைய தொடங்கும்.சென்ற ஆண்டில் ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.230–ஆக இருந்தது. இது தற்போது ரூ.160–ஆக குறைந்துள்ளது. இந்நிலையில் இறக்குமதி வரியை அதிகரிக்குமாறு ரப்பர் தோட்ட உரிமையாளர்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக தென் மாநிலங்களின் தொழில்துறை அமைச்சர்களை ஆனந்த் சர்மா அண்மையில் சந்தித்து விவாதித்தார்.இதன் அடிப்படையில் ஒரு கிலோ ரப்பர் இறக்குமதி மீதான வரியை ரூ.20–லிருந்து ரூ.34–ஆக உயர்த்த மத்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இயற்கை ரப்பர் உற்பத்தியில் கேரளா முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த ரப்பர் உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்கு 90 சதவீதமாக உள்ளது.

## போதிய அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பயிர் சாகுபடி பணிகள் உத்வேகம் பெறும் என மத்திய விவசாய அமைச்சகம் தகவல்

புதுடெல்லி

நடப்பு ஆண்டில் பருவமழை போதிய அளவு பெய்யும் என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இதனால் கரீஃப் பருவத்தில் (ஜுன்–அக்டோபர்) பயிர் சாகுபடி பணிகள் உத்வேகம் அடையும் என்று மத்திய விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**மழை ஏமாற்றினால்...**

‘‘வானிலை ஆராய்ச்சி மையத்தின் மதிப்பீட்டுக்கு இணையாக பருவமழை நிலவரம் இருக்கும் என நம்புகிறேன். மழை திருப்திகரமாக இருந்தால் ஜுன் மாதத்தில் தொடங்கும் கரீஃப் பருவத்தில் விவசாயிகள் உற்சாகத்துடன் சாகுபடி பணிகளை மேற்கொள்வார்கள். ஆனால் மழை ஏமாற்றினால் அதன் விளைவாக ஏற்படும் இடர்பாடுகளை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்’’ என்று விவசாய அமைச்சகத்தின் செயலாளர் ஆஷிஷ் பகுகுணா கூறியுள்ளார்.

நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் பயிர்கள் சாகுபடியினை மேற்கொள்கின்றனர். வட மாநிலங்களில் இப்பருவங்கள் முறையே கரீஃப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இவை முறையே குறுவை மற்றும் சம்பா என்றழைக்கப்படுகின்றன.

**கரீப் பருவத்தின் பங்கு**

இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் பங்களிப்பு 15 சதவீத அளவிற்கே உள்ளது. இப்பருவத்தில் நாடு முழுவதுமாக கோதுமை சாகுபடியே மும்முரமாக நடைபெறுகிறது. அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலம் ரபி பருவம் ஆகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இப்பருவத்தில் விதைப்பு பணிகள், வடகிழக்கு பருவமழையையொட்டி மேற்கொள்ளப்படும். அறுவடை ஜனவரி மாதம் நடைபெறும்.

குறுவை பருவம் பொதுவாக ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைவடைகிறது. குறுவை பருவத்திற்கான விதைப்பு பணிகள் ஜூன் மாதத்தின் இடைப்பகுதியில் தொடங்கி ஜூலை மாதத்தின் இடைப்பகுதியில் நிறைவடையும். செப்டம்பர் மாதத்தில், அதாவது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படும்.

நம் நாட்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைதான் விவசாயத்திற்கு உயிர்நாடியாக உள்ளன. ஏனென்றால் பெரும்பாலான விவசாய நிலங்கள் மழை நீரை நம்பியே உள்ளன. சென்ற ஆண்டில் தென்மேற்கு பருவமழை தாமதமானதால் நாட்டின் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டது. நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 60 சதவீதத்தினர் விவசாயம் சார்ந்த தொழில்களையே நம்பி இருந்தாலும், பொருளாதாரத்தில் வேளாண் துறையின் பங்கு 15 சதவீத அளவிற்கே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் மொத்த விவசாய நிலத்தில் 40 சதவீதம் மட்டுமே முறையான நீர்ப்பாசன வசதிகளை பெற்றுள்ளன.

**மிக முக்கிய பயிர் நெல்**

கரீஃப் பருவத்தின் மிக முக்கிய பயிர் நெல் ஆகும். மேலும் எண்ணெய் வித்துக்கள், கரும்பு, சிறு தானியங்கள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களும் இப்பருவத்தில் சாகுபடி செய்யப்படுகின்றன. ''பருவமழை திருப்திகரமாக இருந்தால் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அமோகமாக இருக்கும். தற்போது உற்பத்தி எந்த அளவிற்கு இருக்கும் என்பதை மதிப்பிட முடியாது'' என சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

**வறட்சியால் பாதிப்பு**

மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சியால் சென்ற நிதி ஆண்டில் (2012–13) வேளாண்மை பாதித்தது. இதனால் உரங்கள் விற்பனையும் சரிவடைந்தது. இந்நிலையில் வருகிற கரீஃப் பருவத்தில் இயல்பான பருவமழை இருக்கும் என்ற மதிப்பீடு உர நிறுவனங்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. கரீஃப் பருவ தேவைப்பாட்டை ஈடு செய்யும் வகையில் போதிய அளவு உரம் கையிருப்பு உள்ளதாக முன்னணி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2011–12 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) சுமார் 26 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியானது. ஆனால் நடப்பு பருவத்தில் (2012–13) உற்பத்தி 25 கோடி டன் அளவிற்கே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் தானிய கிடங்குகள் நிரம்பி வழிந்து கொண்டிருப்பதால் உற்பத்தி குறைந்தது பற்றி கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை என மத்திய அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

**அரிசி, கோதுமை உற்பத்தி**

நடப்பு பருவத்தில் அரிசி உற்பத்தி 10 கோடி டன்னை தாண்டும் என்றும், கோதுமை மகசூல் 9.23 கோடி டன்னாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. 2016–17–ஆம் நிதி ஆண்டில் அரிசி உற்பத்தி 9.80 கோடி டன் முதல் 10.60 கோடி டன் வரை இருக்கும் என்றும், கோதுமை உற்பத்தி 9.30 கோடி டன் முதல் 10.40 கோடி டன் வரை இருக்கும் என்றும் மத்திய அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.